# யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையினுடைய வெளிநாட்டுக் கொள்கையும் அதன் சவால்களும்: விசேடமாக பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுக் கொள்கை தொடர்பான ஓர் விமர்சனப்பார்வை.

கனகரட்ணம் யஸ்மியா
அரசறிவியல்துறை பேராதனைப் பல்கலைக்கழகம், இலங்கை
jashmiy.jecy@gmail.com

## அறிமுகம்

தற்காலத்தில் சர்வதேசப் பரப்பில் எந்தவொரு அரசம் தனித்து இயங்க முடியாது எனும் நிலையில் ஒவ்வொரு அரசும் தன்னை சர்வதேச அரசியல் பரப்பில் செயற்படுத்திக் கொள்வதற்கான சரியான வழிமுறையாக வெளிநாட்டுக் கொள்கை காணப்படுகின்றது. யுத்தத்திற்கு பின்னர் அபிவிருத்தியை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் நிலையில் அதன் வெளிநாட்டுக் கொள்கையில் பல்வேறு எதிர்பார்ப்புக்கள் காணப்படுவதுடன் இதனைத் தீர்மானிப்பதில் பொருளாதாரம் என்பது முக்கிமான இடத்தைப் பெற்றுள்ளது. யுத்தத்தினால் ஏற்பட்ட சேதங்களை சீர்செய்யவும் பாதிக்கப்பட்டவர்களுக்கு புணர்வாழ்வழித்தல் போன்ற தேவைப்பாட்டின் காரணமாக இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் பொருளாதாரம் முக்கியத்துவப்படுத்தப்பட்டு வருகின்றது. இன்று அதிகளவில் சீனா மற்றும் மத்திய கிழக்கு நாடுகளுடனான உறவுகள் அதிகரித்துள்ளதுடன் அதனை அடிப்படையாகக் கொண்டு கடன்கள், முதலீடுகள், உதவிகள் போன்ற வாய்ப்புக்களையும் பெற்றுக் கொண்டுள்ளன.

2009-2014 இறுதி வரையில் வெளிநாட்டுக் கொள்கையில் பொருளாதார நலன்கள் மேம்பட்டுக் காணப்பட்டதுடன் இலங்கையானது அபிவிருத்தியில் பின்தங்கிய நிலையிலிருந்து மத்தியதர அபிவிருத்தியைக் கொண்ட நாடுகளின் பட்டடியலுக்குள் உள்வாங்கப்படும் அளவுக்கு முன்னேற்றமடைந்தாலும் மனிதஉரிமைமீறல்கள் செயற்பாட்டினாலும் அதிகாரத்துவமிக்க ஆட்சியினாலும் ஐரோப்பிய ஒன்றியத்தினூடாக வழங்கப்படும் GSP+ வரிச்சலுகைகள் போன்றன இழக்கப்படுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டன. 2015ம் ஆண்டு ஆட்சிமாற்றத்தினைத் தொடர்ந்து சீனாவுடனான இலங்கையின் தொடர்புகள் மட்டுப்படுத்தப்பட்டதோடு மேற்கத்தேயம் சார்ந்ததாக இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை மாற்றம் காண வந்தது.

இலங்கை அரசானது 30வருடகால இனமுரண்பாடு காரணமாக நிலவி வந்த யுத்தத்தினை முடிவுக்கு கொண்டு வருவதிலேயே கூடுதல் அக்கறை செலுத்தி வந்தது. யுத்த சூழ்நிலை முடிவுக்கு கொண்டு வரப்பட்டதில் இருந்து நாட்டினை மீள்கட்டமைப்பதும், மக்களுக்கு புணர்வாழ்வழிப்பதும் அரசாங்கத்தின் தேவையாக உணரப்பட்டதுடன், அபிவிருத்தியை நோக்கி நகரும் மூன்றாம் உலகநாடு என்ற வகையிலும் பொருளாதாரத்தை செலுமைப்படுத்த வேண்டிய தேவையினால் தனது வெளிநாட்டுக் கொள்கையில் பொருளாதாரத்துக்கு முக்கியமளித்ததுடன் வெளிநாட்டுக் கொள்கையில் மாற்றங்களை கொண்டு வரும் போது பொருளாதாரம் சார் விடயங்களை கருத்தில் கொள்ள வேண்டிய நிலைப்பாடு உருவாகியுள்ளது எனலாம்.

யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் பொருளாதாரத்துக்கும் ஒரு முக்கிய இடத்தினை வழங்க வருகின்றது என்ற வகையில் பொதுவாக யுத்தத்திற்க பின்னர் எத்தகைய பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றது யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் வெளிநாட்டுக் கொள்கையில் பொருளாதாரமானது எத்தகைய முக்கியத்துவத்தினைக் கொண்டுள்ளது என்பதுடன் பொருளாதார ரீதியாக இலங்கை கையாள்கின்ற வெளிநாட்டுக் கொள்கையானது இலங்கையின் பொருளாதாரம் உட்பட ஏனைய விடயங்களில் எத்தகைய தாக்கத்ததை ஏற்படுத்துகின்றது என்பதுடன் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுக் கொள்கையை மேற்கொள்வதில் காணப்படுகின்ற சவால்கள் என்பதே இவ் ஆய்வின் ஆய்வுப் பிரச்சினையாகும். குறிப்பாக யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுக் கொள்கையை முன்னெடுப்பதில் எதிர் கொள்ளும் சவால்களை அடையாளம் காண்பது என்பது இவ்ஆய்வின் பிரதான நோக்கமாகவுள்ளது.

## ஆய்வு முறையியல்

யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் பொருளாதார ரீதியிலான வெளிநாட்டுக் கொள்கையினை மையப்படுத்தியதாக முன்னெடுக்கப்பட்டுள்ள இவ் ஆய்வானது முதலாம்தர மற்றும் இரண்டாம்தர மூலாதாரங்களை பயன்படுத்தி மேற்கொள்ளப்படவுள்ளது. இவை பெரும்பாலும் மத்தியவங்கியின் ஆண்டறிக்கைகள் முன்னைய ஆய்வுகள், புத்தகங்கள், அறிக்கைகள், பத்திரிக்கைத் தொகுப்புக்கள் மற்றும் இணையத்தளங்களினூடாக வெளியிடப்பட்ட இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை மற்றம் பொருளாதார ரீதியிலான வெளிநாட்டுக் கொள்கை தொடர்பான கட்டுரைகள் மற்றும் தகவல்களும் இவ் ஆய்வில் தரவுகளாகப்பயன்படுத்தப்பட்டுள்ளன.

## தரவுப்பகுப்பாய்வு

இப்பகுதியின் பிரதான நோக்கம் யுத்தத்துக்கு பின்னரான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையும் எதிர் நோக்குகின்ற சவால்களும் குறிப்பாக பொருளாதார ரீதியிலான வெளிநாட்டுக் கொள்கை தொடர்பான ஒரு விமர்சனத்தை முன்வைப்பதாகும். ஆதலால் தவுகள் பண்புசார் அடிப்படையில் புகுப்பாய்வு செய்யப்பட்டு விபரண ரீதியிலான முறைமையில் உள்ளது. தரவுகள் தலைப்புடன் பொருந்திச் செல்லக் கூடிய நிலையில் சரிபார்க்கப்பட்டு வரைபடங்கள், அட்டவணைகள் போன்ற விடயங்களைப் பயன்படுத்தி பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. ஆய்வுக்குப் பொருத்தமான விடயங்களை பகுப்பாய்வுக்கு உட்படுத்தும் போது யத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை தொடர்பான இலக்கியங்களும் கவனத்தில் கொள்ளப்பட்டன. ஏனெனில் இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையின் ஆரம்பம் தொட்டே பொருளாதாரமானது எத்தகைய முக்கியத்துவத்தினைப் பெற்று வந்துள்ளது என்பபதனை இனம்காணும் நோக்கிலாகும். மேலும் மத்திய வங்கியின் ஆண்டறிக்கையானது யுத்தத்திற்குப் பின்னரான காலப்பகுதியில் இலங்கையானது வெளிநாடுகளிடமிருந்து பெற்றுக்கொண்ட கடன், நன்கொடை உதவிகள் மற்றும் முதலீடுகள் தொடர்பாக அறிந்து கொள்ளும் வகையில் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ளது. மேலும் சமகாலத் தகவல்களைப்

பெற்றுக்கொள்ளத்தக்க வகையில் தலைப்புக்கள் மற்றும் காலஒழுங்கின் அடிப்படையில் சஞ்சிகைகள் மற்றம் பத்திரிகைகள் என்பனவற்றின் ஊடாக ஆய்வுக்கு துணைசெய்யக் கூடிய தகவல்களானவை பகுப்பாய்வுக்கு உட்படுத்தி பெறப்பட்டன. இது தவிர இணையத்தளங்களில் இருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட தகவல்களும் தலைப்பிற்கிணங்க ஒழுங்குபடுத்தப்பட்டு பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டு தலைப்புடன் இணங்கிச் செல்லக் கூடிய தகவல்கள் உள்வாங்கப்பட்டுள்ளன. இவ் வகையில் சேகரிக்கப்பட்ட தரவுகள் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டுள்ன.

## யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை

உலகமயமாக்கம் மற்றும் தங்கியிருத்தல் காரணமாக தற்காலத்தைப் பொறுத்த வரையில் எந்தவொரு அரசும் தனியாகச் செயற்பட முடியாத நிலைமை காணப்படுகின்றது. இலங்கை ஓர் அபிவிருத்தியடைந்து வரும் நாடு எனும் வகையிலும் யத்தவெற்றிக்குப் பின்னரான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கை எனும் வகையில் நாட்டினை மீளக்கட்டியெழுப்பவும், பாதிக்கப்பட்ட மக்களுக்கு புணர்வாழ்வழிக்கவும் நாட்டினை அபிவிருத்திப் பாதையில் அழைத்துத்துச் செல்லவும் நாட்டினை பொருளாதார ரீதியாக பலப்படுத்த வேண்டிய தேவைப்பாடு காணப்பட்டது. இலங்கையானது அபிவிருத்தியடைந்து வரும் நாடு என்ற வகையிலும் சிவில் யுத்தத்தினை எதிர்கொண்ட நாடு என்ற வகையிலும் பொருளாதாரத்தை வெற்றி கொள்வது என்ற வகையிலும் பொருளாதாத்தை வெற்றி கொள்வது என்பது சவால்மிக்கதாகவே காணப்பட்டது. இலங்கையினால் தனித்து நாட்டினை மீள்கட்டுமானப் பணிகளோடு பொருளாதார அபிவிருத்தியை அடைந்து கொள்வது என்பது கடினமானது என்பதுடன், யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் தேசிய நலன்களில் ஒன்றாக பொருளாதார விருத்தித்தியை அடைந்து கொள்ள சர்வதேசத்தின் உதவியினை பெற்றுக்கொள்ள ஏனைய நாடுகளுடன் கூட்டிணைந்தவகையில் செயற்பட முன்வந்துள்ளது. தேசியநலன் கோட்பாட்டில் மோகன்தோ குறிப்பிடுவதன் பிரகாரம் "ஒருஅரசு ஏனைய அரசுகளின் பரஸ்பர உதவி ஒத்துழைப்புக்களுக்கு ஊடாக தனது பொருளாதார நிலைப்படுத்தலை அதிகரிப்பதற்கான ஆர்வத்தை குறித்து நிற்கின்றது." ஏன்ற வகையில் இலங்கையின் யுத்தத்திற்குப் பிந்திய வெளியுறவுக் கொள்கையை நோக்குகின்ற போது விளங்கிக் கொள்ள முடிகின்றது.

யுத்தக்குற்றச்சாட்டுக்கள் மற்றும் மனிதஉரிமைமீறல்கள் காரணமாக மேற்குடனான உறவு என்பது முறிவடைந்த நிலையிலேயே காணப்படுவதுடன் இலங்கை மிக நீண்டகாலமாக பொருளாதார உறவினைப் பேணிவரும் சீனாவுடனான உறவு என்பது மிகவும் பலப்படுத்தப்பட்டது. இந்தியா ஆசியா, ஆபிரிக்கா ஆகிய நாடுகளுடனான உறவுகளும் காணப்பட்டன. யுத்தத்திற்குப் பின்னரான இலங்கைக்கு பொருளாதாரம் என்பது மிகவும் இன்றியமையாதது என்பதனை அறிந்து இலங்கை மீது குற்றச்சாட்டுக்களை முன்வைத்த மேற்குலகம் பொருளாதாரத்தை முடக்குவதன் ஊடாகவே தண்டனைகளை வழங்க விளைந்த நிகழ்வுகளினையும் அவதானிக்கக் கூடியதாகவிருந்தது. இத்தகைய போக்கினை யுத்தத்திற்குப் பின்னரான வெளிநாட்டுக் கொள்கை வெளிப்படுத்தி நின்றாலும் 2015ம் ஆண்டு இடம்பெற்ற ஆட்சிமாற்றத்தைத் தொடர்ந்து இத்தகைய போக்கில் மாற்றம் ஏற்பட்டது. யுத்தத்திற்குப்

பின்னரான இலங்கையில் இரு வேறுபட்ட போக்கினை உடைய ஆட்சியின் கீழ் வெவ்வேறு கோணங்களில் வெளிநாட்டுக் கொள்கைகள் முன்னெடுக்கப்பட்டாலும் வெளிநாட்டுக் கொள்கையில் பொருளாதாரத்தினை முக்கியப்படுத்தத் தவறவில்லை என்றே கூறலாம்.

**மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் கீழான வெளிநாட்டுக் கொள்கையில் பொருளாதாரம்**

யுத்த சூழ்நிலைகள் தணிந்து ஓரளவிற்கு அமைதி நிலவிய காலப்பகுதி என்ற வகையில் நாட்டைப் பொருளாதார ரீதியாகப் பலப்படுத்தும் பொருட்டு இலங்கை அரசாங்கமானது தனது வெளிநாட்டுக் கொள்கையில் பொருளாதாரத்திற்கு ஒரு முக்கிய இடத்தை வழங்க வந்தமையினை அவதானிக்க முடிந்தது. இக்காலப்பகுதியில் ஐரோப்பா மற்றும் அமெரிக்காவுடனான உறவு முதன்மை பெறவில்லை என்பதனாலும் குற்றச்சாட்டுக்கள் முன்வைக்கப்பட்டமையினாலும் அவற்றினூடாக வழங்கப்பட்டு வந்த பொருளாதார ரீதியிலான சலுகைகள் மற்றும் சந்தை வாய்ப்புக்கள் என்பன மீளப்பெறப்பட்டன. குறிப்பாக GSP+ வரிச்சலுகை மற்றும் ஐரோப்பிய சந்தைக்கான மீன் ஏற்றுமதி என்பன தடைப்பட்டன. அமெரிக்காவுடனான வர்த்தக உடன்படிக்கைகளும் நலிவடைந்தன. இலங்கை மற்றும் ஐக்கியராச்சியத்துக்கிடையில் கைச்சாத்திடப்பட்டிருந்த இருதரப்பு வர்த்தக உடன்படிக்கைகளும் படிப்படியாக இல்லாமல் செய்யப்பட்டது. ஆனபோதிலும் இலங்கைப் பொருட்களின் பெரும்பகுதியான ஏற்றுமதியானது மேலைநாடுகளுக்கே மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதனை மத்தியவங்கியின் ஆண்டறிக்கையினை அவதானிக்கும் பொழுது புலப்படுகின்றது. இக்காலப்பகுதியில் இலங்கையானது தன்மீதான குற்றச்சாட்டுக்களையும் தாண்டி தன்னுடைய நலன்களைப் பாதுகாக்க மேற்குடன் பகை கொண்டு கிழக்குடன் கைகோர்த்தது எனலாம்.

மகிந்த சிந்தனையில் இந்தியா, ஜப்பான், சீனா, பாகிஸ்தான் ஆகிய ஆசிய நாடுகளுடன் கடைப்பிடித்து வரும் எமது நட்புறவான தொடர்புகள் காணப்பட்டுள்ளதுடன் அரசியல், பாதுகாப்பு, பொருளாதார, வியாபார மற்றும் பொருளாதாரத்துறைகளில் மிகவும் நட்புறவுடனான உறவுகள் காணப்பட்டன. இவை ஆசியநாடுகளுடன் நெருங்கியிருந்து பொருளாதார நலன்களைப் பெற்றுக் கொள்வதற்கு துணைபுரிந்தது எனலாம்.

ஆசிய பசுபிக் வர்த்தக உடன்படிக்கையின் கீழ் இலங்கையினால் கேட்டுக்கொள்ளப்பட்ட தீர்வைக் குறைப்புக்களின் கட்டமைப்பு மற்றும் கட்டுப்பாடுகள் இலங்கைக்க மிகச் சாதகமான வுர்த்தகப்படுத்தலை ஏற்றபடுத்தின. இலங்கை – பாகிஸ்தான் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் உத்வேகமடைந்தன. இலங்கையில் சீனா, இந்தியா, ஜப்பானிய நிதி உதவிகளோடு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. குறிப்பாக இந்தியாவின் உதவியின் கீழ் 490000 வீடுகள் அமைத்துக் கொடுக்க முன்வந்ததுடன் விவசாய புத்தாக்கம், வீதி அபிவிருத்தி மற்றும் புணரமைப்புக்கள் Aid of Sri Lanka போன்றன முன்னெடுக்கப்பட்டன. மேலும் சீனாவானது அம்பாந்தோட்டைத் துறைமுகம் மற்றும் புத்தளம் நிலக்கரி வலுச் செயற்திட்டம் போன்றனவற்றிற்கு நிதியுதவி வழங்கியதுடன் மேலும் பல அபிவிருத்தித் திட்டங்கள் இவரது காலத்தில் இடம்பெற்றது.

இவரது ஆட்சியின் கீழான வெளிநாட்டுக் கொள்கையில் பொருளாதாரத்திற்கு முக்கிய இடத்தினை வழங்கியுள்ள தோடு பொருளாதார ரீதியிலான ஓரளவு முன்னேற்றம் காரணமாக அபிவிருத்தியில் மத்தியமயமான நிலைக்கு முன்னேற்றமடையவும் இத்தகு உறவானது காரணமாக அமைந்தது எனலாம். பல்வேறு சவால்களை இக்காலத்தில் எதிர்கொள்ள நேரிட்டாலும் இலங்கையின் தேசியநலன்கருதி யத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் மகிந்த அரசாங்கம் பொருளாதாரத்திற்கு முக்கியத்துவம் வழங்கத் தவறவில்லை என்றே கூறமுடியும்.

## நல்லாட்சி அரசாங்கத்தின் கீழான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் பொருளாதாரம்

ஒன்றிணைந்த தேசம் என்ற தொனிப்பொருளில் அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட வெளிநாட்டுக் கொள்கையானது ஆரம்பகாலத்தில் மேற்குசார் என்ற நிலையில் காணப்பட்டாலும் பிற்பட்ட காலத்தில் எல்லா நாடுகளுடனான உறவுகளுக்கும் முக்கியத்துவம் அளிப்பதனைக் காணக்கூடியதாகவுள்ளது. ஆட்சிமாற்றத்தினைத் தொடர்ந்து பிரதமரும், சனாதிபதியும் பல நாடுகளுக்கு விஜயங்களை மேற்கொண்டுள்ளதுடன் அதன் போது இலங்கைக்குத் தேவையான பொளாதார அபிவிருத்தியின் அவசியத்தை உணர்த்தி அதற்கான உதவிகளையும் ஒத்துழைப்புக்களையும் பெற்றுக் கொண்டுள்ளனர். இதன் போது இலங்கைக்குக் காணப்பட்ட அதிக கடன்பளு மற்றும் அவற்றுக்கான அதிக வட்டிகளைக் குறைப்பதற்கும் முயற்ச்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ் ஆட்ச;யினைப் பொறுப்பேற்கும் போது இவ் அரசாங்கம் அதிக கடன் சுமைக்களுஂ ப்ளப்பட்டிருநு்தது. இதனை சில பத்திரிக்கைகள் கிரேக்கமாக மாறி வரும் இலங்கை என அடையாளப்படுத்த;ிருந்தமை குறிப்பிடத் தக்கதாகும். அம்பாந்தோட்டையில் நிர்மாணிக்கப்பட்ட விமான நிலையம் மற்றும் துறைமுகத்தினை அண்டிய பிரதேசங்களில் தொழில்சாலைகளை நிறுவி ஏற்றுமதி மற்றும் தொழில்வாய்ப்பபுக்களை அதிகரிப்பதற்கான நடவடிக்கைகள் பலவும் மேற்கொள்ள்பட்டதாகவும் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பல பத்திரிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

ஐரோப்பிய நாடுகளிற்கு மேற்கொண்ட விஜயத்தின் போது 2010களில் தடைசெய்யப்பட்ட GSP+ வரிச்சலுகைகளை மீளப்பெறுவதற்கு வேண்டியும் 2014களில் தடைசெய்யப்பட்ட ஐரோப்பிய சந்தைகளுக்கான மீன் ஏற்றுமதிகளை மீளப்பெறுவதற்காகவும் மேற்கொண்ட முயற்சசியின் பயனாக இரண்டு தடைகளும் நீக்கப்பட்டுள்ளன. இது தொடர்பாக கலாநிதி ஜொகான் பெரோ தனது கட்டுரையில் குறிப்பிடும் போது ‘‘மீன்கள் ஏற்றுமதித் தடை நீக்கப்பட்டுள்ளமையானது ஆயிரக்கணக்கான இலங்கை மீனவர்களது குடும்பங்களையும் நாட்டின் பொருளாதார அமைப்பின் இறுதி நிலையில் உள்ளவர்களையும் பொருளாதாரத்தில் மேம்பாடடையச் செய்வதுடன் நாட்டின் பொருளாதாரத்தையும் மேம்பாடடையச் செய்வதாக இருக்கும்’’.

GSP+ வரிச்சலுகை மூலம் இலங்கைக்கு வரக்கூடிய மூலதனத்தின் அளவு அதிகரிக்கும் என்பதனால் மீளப்பெற்றுக் கொள்வதற்கு பல்வேறு நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ள போதிலும் அதனை பெற்றுக்கொண்டுள்ளது. ஏனைய ஏற்றுமதிகளிலும் கிட்டத்தட்ட 60%

வரிச்சலுகைக்கான வாய்ப்பபுக்கள் அதிகரிக்கப்பட்டன. இன்று அமெரிக்காவுடனும் இருதரப்பு வர்த்தக உறவுகள் வலுப்படுத்தப்பட்டுள்ளன. இந்தியாவுடன் பொருளாதார மற்றும் தொழில்நுட்ப உடன்படிக்கை, ஜப்பானுடனான உறவின் மூலம் சலுகை அடிப்படையில் 50பில்லியன் ரூபாய்களை கடனாக பெற்றுக்கொள்ள முன்வந்துள்ளமை, பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலைய அபிவிருத்திக்காக 56 பில்லின் ரூபா கடனாக வழங்கவும் ஜப்பான் தீர்மானித்துள்ளது.

சுருக்கமாக அண்மைக்காலத்தில் வர்த்தகம், வியாபாரம், முதலீடு உள்ளிட்ட பல்வேறு துறைகளில் விஸ்தரித்துள்ளது. அபிவிருத்தியடைந்த நாடுகளுடனான வர்த்தகத் தொடர்புகள் அதிகரித்துள்ளன என்பதுடன் இலங்கையின் ஏற்றுமதியில் 60% G7 நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படடுள்ளன. இவ்வாறு நல்லாட்சி அரசாங்கத்திற்கு கீழான வெளியுறவுக்கொள்கையிலும் பொருளாதாரம் என்பது அடிப்படை விடயமாக அமைந்துள்ளதைக் கண்டு கொள்ளக் கூடியதாகவுள்ளது.

இவ்வாறு யுத்தத்திற்குப் பின்னரான வெளிநாட்டுக் கொள்கையில் இலங்கையானது பொருளாாதாரத்திற்கு பிரதான இடத்தினை வழங்க வந்துள்ள போக்கினை அவதானிக்க கூடியதாகவுள்ளது. இதனால் இலங்கையின் பொருளாதாரம் என்பது வெளிநாட்டுக் கொள்கையில் தான் தங்கியுள்ளது எனவும் வெளிநாட்டுக் கொள்கையில் பொருளாதாரம் சார் விடயங்கள் மாத்திரம் தான் கருத்தில் கொள்ளப்படுகின்றது என பொருள் கொள்ளமுடியாது. மாறாக இலங்கையானது தனது தேசிநலன்களில் ஒன்றான பொருளாதார நலன்களை அடைந்து கொள்ள வெளிநாட்டுக் கொள்கையையும் பயன்படுத்திக் கொண்டுள்ளது என்றே அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

பொருளாதாரத்தை முன்னேற்றும் வகையில் பல்வேறு நாடுகளில் இருந்தும் சலுகை அடிப்படையிலான கடன் உதவிகளை பெற்றுக் கொண்டது. இதனூடாக இலங்கையின் உற்பத்திகள் அதிகரிக்க வந்ததுடன் சந்தைவாய்ப்புக்களை பெற்றக் கொள்ளவும் வழியேற்பட்டது. சலுகைகள் பலவற்றை மீளப்பெற்றுக் கொள்ள வழியேற்படுத்தப்பட்டதுடன் ஏற்றுமதிகள் அதிகரித்தன. குறிப்பாக ஐரோப்பிய ஒன்றியத்திற்கான மீன் ஏற்றுமதி வாய்பின் மூலம் 120கோடி அமெரிக்க டொலர்கள் இலாபம் கிட்டடியதாக பல்வேறு இலக்கியங்களும் சுட்டிக்காட்டுகின்றன. மேலும் இதன் மூலம் சந்தை வாய்ப்பபுக்களைத் தக்கவைத்துக் கொள்ளவும் முடிகின்றது. அதாவது இலங்கையின் உற்பத்தியில் கிட்டத்தட்ட 60% G7 நாடுகளுக்கே ஏற்றுமதி செய்யப்படுகின்றது. என்ற வகையில் பொருளாதார ரீதியிலான உறவினை வலுப்படுதம்துவதனாலேயே இந்த சந்தை வாய்ப்புக்களையும் தக்கவைத்துக் கொள்ள முடிகின்றது.

## யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுக் கொள்கைகயை முன்னெடுப்பதில் எதிர் கொள்ளும் சவால்கள்

யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையில் தனது வெளிநாட்டுக் கொள்கையில் தேசியநலனை இலக்காகக் கொண்டு பொருளாதாரத்தை முக்கியத்துவப்படுத்தி வந்துள்ளது எனலாம். ஆயினும்

இவை தொடர்பில் பல்வேறு சவால்களை எதிர் கொள்ளவேண்டிய நியைே காணப்படுகின்றது. பிரதானமாக பலம் பொருந்திய அரசுகளின் அழுத்தங்களிற்கு முகங்கொடுக்க வேண்டிய நிலையேற்பட்டுள்ளது. மேற்குடனான உறவினை வரையறுத்து சீனாவுடனான உறவினை வலுப்படுத்தியமையாலும் பல்வேறு குற்றச்சாட்டுக்களின் பெயரில் GSP+ வரிச்சலுகைகள் நீக்கப்பட்டன. இதனால் பொருளாதார ரீதியாக நஷ்டங்கள் ஏற்பட்டன. அத்துடன் கடந்தகால அரசாங்கத்தின் ஆட்சிக்காலத்தில் பல்வேறு கடன்களை சீனா இலங்கைக்கு வழங்கியது. ஆனால் தற்போதைய நல்லாட்சி அரசாங்கம் சீனாவினது உறவினை முறித்துக் கொள்ள எத்தணித்த போது பல்வேறு நெருக்கடிகளை எதிர்கொள்ள வேுண்டியேற்பட்டது. இலங்கையின் வெளியுறவுக்கொள்கையில் மாற்றங்கள் வருகின்ற போது இவற்றின் செயற்பாடுகளுக்கு தடையினை மேற்கொள்கின்ற போதோ அல்லது அவற்றின் செயற்பாடுகளுக்கு தடைகள் வருகின்ற போதோ பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டே அழுத்தங்கள் விடுக்கப்படுவதற்கு பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்டு முன்னெடுக்கப்படும் வெளிநாட்டுக் கொள்கையே காரணமாகின்றது.

சுயமாகவும் தீர்க்கமான வகையிலும் முடிவுகளை மேற்கொள்வதில் சிக்கல்களை எதிர் கொள்கின்றது. குறிப்பாக பொருளாதார ரீதியிலான சிக்கல்கள், புவிசார் அரசியல் செல்வாக்குகள் காரணமாக இத்தகைய சவால்களை எதிர் கொள்கின்றது. எடுத்துக்காட்டாக இலங்கை துறைமுகநகர் திட்டத்தை விளக்க முடியும். மேலும் இலங்கைக்கு உதவித்திட்டங்களை வழங்கும் நாடுகள் அல்லது நிறுவனங்கள் மற்றும் பிராந்திய அமைப்புகள் பல்வேற நிபந்தனைகளையும் கட்டுப்பாடுகளையும் விதிப்துடன் அவற்றினை நடைமுறைப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தமும் காணப்படுகின்றது. இவை பெரும்பாலும் இலங்கையின் தேசியநலனுக்கு எதிராகவும் நிபந்தனை முன்வைக்கும் நாடுகளதும் அமைப்புக்களதும் நலன் சார்ந்தததுமாகவே காணப்படுகின்றன. இதனால் இலங்கையின் இறைமை கேள்விக்குள்ளாக்கப்படுகின்றது.

இலங்கையானது தனது வெளிநாட்டுக் கொள்கையில் பொருளாதாரத்தை முன்னுரிமைப்படுத்தி வெளிநாட்டுக் கொள்கையினை முன்னெடுக்க வருகின்றபோது பலம் பொருந்திய நாடுகள் போட்டி போட்டுக் கொண்டு உதவிகளை வழங்கவும் அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கவும் வருவதற்கான பிரதான காரணம் ஆசிய பிராந்தியத்தில் தங்களது அதிகாரத்தை நிலைநாட்டுதல் என்ற தேசியநலனே பிரதான காரணம். அதனால் இலங்கையின் பொருளாதாரத்தை பூர்த்தி செய்ய கரம் கொடுத்தல் என்ற பெயரில் அமெரிக்கா, சீன, இந்திய அரசுகள் தங்களது அதிகாரத்தை இலங்கையில் நிலைநிறுத்த போட்டியிடுகின்றன. இதனால் இலங்கையின் தேசியநலன் செயற்படுத்தப்படுகின்றதோ இல்லையோ, இலங்கையின் தேசியநலன் அடிப்படையாகக் கொண்டு தங்களது நலனைப் பூர்த்தி செய்கின்ற நிலை காணப்படுகின்றது.

யுத்தத்திற்குப் பின்னரான அபிவிருத்தியின் பொருட்டு இலங்கை பல நாடுகளிலும் இருந்து அதிகளவான கடன்களைப் பெற்று வருகின்றது. அதனை அடைப்பதற்கு சர்வதேச நாணயநிதியம் மற்றும் உலகவங்கி போன்றவற்றை நாடுகின்றது. இதனால் இலங்கையின்

கடன்சுமைய அதிகரிக்கின்றதே தவிர பொருளாதாரம் அதிகரிப்பதற்கான வாய்ப்புகள் இல்லை. தற்போது இலங்கையின் வெளிநாட்டுக் கடனானது நூறுபில்லியன் டொலருக்கும் அதிகமாகவுள்ளதாக மத்தியவங்கியின் ஆண்டறிக்கை குறிப்பிடுகின்றது. இத்தகைய நிலைமை இலங்கையை மேலும் நெருக்கடிக்குள் உட்படுத்துவதாகவே அமைகின்றது.

இலங்கையின் வளங்கள் சுரண்டப்படுவதுற்கும் முதலீட்டிற்காக எப்பொழுதும் ஏனைய நாடுகளை நம்பியிருக்க வேண்டிய தேவையும் ஏற்படுகின்றது. உற்பத்திகளை விட இறக்குமதிகளே அதிகம் காணப்படுகின்ற போக்கு காணப்படுகின்றது. குறிப்பாக தன்னுடைய வெளிநாட்டுக் கொள்கையின் பலனாக தான் உறவுகொள்ளும் நாடுகளின் சந்தைகளாகப் பயன்படுத்தப்படுகின்றதே தவிர தனக்கான சந்தைவாய்ப்பு என்பது குறைவாகவே காணப்படுகின்றுது. அத்துடன் இலங்கையில் சீரானதொரு வெளிநாட்டுக் கொள்கை காணப்படாத விடத்து வெளிநாடுகளில் முதலீடுகளைப் பெற்றே அவற்றை சீர் செய்யவேண்டியுள்ளது. வெளிநாட்டு முதலீடின் ஊடாக தன்னைப் பலப்படுத்த விளைந்த இலங்கை சீனா, இந்தியா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியத்துடன் இருதரப்பு மற்றும் பலதரப்பு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டுள்ளது. இதனால் சர்வதேச சூழ்நிலைகளுக்கு இணங்கிச் செயற்பட வேண்டிய நிலைமையும் இலங்கைக்கு ஏற்பட்டுள்ளது. யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையானது தனது பொருளாதார பலத்தைக் கட்டியெழுப்புதல் என்ற தேசிய நலனனை அடிப்படையாகக் கொண்டு வெளிநாட்டுக் கொள்கையை முன்னெடுக்க வரும் போது தெரிந்தோ தெரியாமலோ இத்தகைய சவால்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது.

## முடிவுரையும் பரிந்துரையும்

யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் வெளிநாட்டுக் கொள்கையில் ஏனைய காரணிகளைக் காட்டிலும் பொருளாதாரதக் காரணியின் முக்கியத்துவம் அதிகரிக்கப்பட்டுள்ளதுடன் பொருளாதாரக் காரணிகளை அடிப்படையாகக் கொண்டு பொருளாதாரக் கொள்கைகள் முன்னெடுக்கப்படும் போது பல்வேறு சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளது. யுத்தத்திற்குப் பின்னரான இலங்கையின் பொருளாதாரம் மிகவும் பின்னடைந்த நிலையிலும், கடன்சுமைகள் அதிகரித்துள்ளமை தற்போதைய நல்லாட்சி அரசாங்கத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் அதனை நிவர்த்தி செய்து கொள்வதற்கு அதிகளவில் வெளிநாடுகளிடமிருந்து கடன்களையும் பெற்றுக் கொள்கின்றது. குறிப்பாக இத்தகையதொரு நிலையில் பலம் பொருந்திய அரசுகளே அழுத்தங்களையும் நிபந்தனைகளையும் விதிக்க வருகின்றன என்பதுடன் இலங்கை போன்ற தரத்திலுள்ள நாடுகளடனான சவாலுக்கு உட்படுத்தும் தன்மை குறைவு என்பதுடன் நட்பு நாடுகளுக்கு பலமாக அமையவருவதையும் காணமுடிகின்றது. பெரும்பாலும் பொருளாதார ரீதியிலான உறவு என்பது பலம் பொருந்திய நாடுகளுடனேயே மேற்கொள்ளப்படுவதுடன் இவ்வாறான உறவுகளை ஒழுங்கமைத்துக் கொள்வதில் புவிசார் அரசியல் செல்வாக்குளும் தாக்கம் செலுத்துகின்றன.

முழுமையான உதவி, நன்கொடை, கடன், முதலீடு எனத் தங்கியிருக்காமல் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொண்டு உள்நாட்டு வளங்களை உரிய முறையில் கையாண்டு உற்பத்திகளை வெளிநாட்டுச் சந்தை வாய்ப்பபுக்களைப் பெற்றுக் கொள்ள முயற்ச்சிக்கலாம்.

வெளிநாட்டுக் கொள்கையினை முன்னெடுக்கும் பொழுது பக்கச்சார்பின்றி நடுநிலைமையான வகையில் மேற்கொள்ள வேண்டும். மிகமுக்கியமாக ஆட்சி மாற்றங்கள் வெளிநாட்டுக் கொள்கையினை தீர்மானிக்க வருகின்றபோது அழுத்தங்களுக்கு உட்படாத வகையில் உறவுகளை ஒழுங்கமைத்துக் கொள்வதன் ஊடாகவும் சவால்களில் இருந்து ஓரளவிற்கேனும் தப்பித்துக் கொள்ளலாம். இவ்வாறான வகையில் யுத்தத்திற்குப் பின்னரான பொருளாதாரத்தை அடிப்படையாகக் கொண்ட வெளிநாட்டுக் கொள்கையினை முன்னெடுக்கும் போது சவால்களைத் தவிர்த்துக் கொள்வதற்கான வாய்ப்புக்கள் அதிகமாகக் காணப்படும்.

**உசாத்துணை நூல்கள்**

**Book**

Ambalavannar Sivarjah (1995) U.S Sri Lanka relationship in the 1980s institute of higher education

Wiswa Warnapala , W.A (2007) Sri Lanka Soviet relation A study in retrospect godage inrernational publishers.

கணேசலிங்கம், கே. ரீ. (2004) இலங்கையின் வெளியுறவுக் கொள்கை 1948- 2010. கொழும்பு – சென்னை: குமரன் புத்தக இல்லம்.

சந்திரசேகரம், செ. (2013) பொருளாதார அபிவிருத்தி. கொழும்பு – சென்னை: குமரன் புத்தக இல்லம்.

**அறிக்கை**

மகிந்தவின் சிந்தனை தொலை நோக்கு (2010)

இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை (2010)

இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை (2012)

இலங்கை மத்திய வங்கி ஆண்டறிக்கை (2014)

**WEBSITES**

VERNON L.B. MENDIS (2017). THE ROOTS OF SRI LANKA FOREIGN POLICY AVAILABLE TO: HTTP://JOURNALS.SAGEPUB.COM/DOI/ABS/10.1177/097152319400100105?JOURNALCODE=SASA

SARATH WIJESINGHE (2018) FOREIGN POLICY IN SRI LANKA: IS IT EFFECTIVE & PRODUCTIVE? AVAILABLE TO : HTTPS://WWW.COLOMBOTELEGRAPH.COM/INDEX.PHP/FOREIGN-POLICY-IN-SRI-LANKA-IS-IT-EFFECTIVE-PRODUCTIVE/